**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை: - திரு. மு. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

2022 - ம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 22 - ம் நாள், செவ்வாய்க்கிழமை.

**வ.வி.எண்.3/2021**

**இன்**

**அசல் வழக்கு எண்.45/2021**

**1.** N. செல்வ குமார்

**2.** சுபத்ரா

**3.** சுப்பிரமணியம்

**4.** J. சேகர்

**5.** N. விக்னேஷ்வரன்

**6.** K.P. கிருஷ்ண பிள்ளை

**7.** N. ரெத்தினவேல் பாண்டியன்

**8.** C. பாலகிருஷ்ணன்

**9.** சந்திரகுமார்

**10.** K. ரவிசந்திரன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

**1.** A.S. சுபாஷ்

**2.** R.S. அதுல்யா ... எதிர்மனுதாரர்கள்/1 மற்றும் 2

பிரதிவாதிகள்

இம்மனுவானது, 22.02.2022 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர். திரு. N. சந்திரசேகர் அவர்கள் ஆஜராகியும், 1 - வது எதிர்மனுதாரர் / 1 - வது பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர். திரு. S. ராமசந்திரன் நாயர் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1 - வது எதிர்மனுதாரர் / 1 - வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆகியவைகளை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து வந்த, இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவு

**1.** இம்மனுவானது, மனுதாரரின் மனுவின் படி, அவர் இந்த மனுவினை தனக்காகவும், மற்ற வாதிகளுக்காகவும் தாக்கல் செய்திருப்பதாக தெரிவிக்கிறார். மனுவானது கட்டளை 39 விதி 1 மற்றும் 2 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி, இடைக்கால உறுத்துக் கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

மனுதாரர்கள் மணவாளக்குறிச்சி வருவாய் கிராமம், புதிய சர்வே எண்.501, 206 மற்றும் 500 புல எண்களில் உள்ள உட்பிரிவு செய்யப்பட்டுள்ள பூமிகளில் விவசாயம் செய்து வருவதாகவும், நெல், வாழை விளை பயிராகவும் மற்றும் தென்னை மரம் நடவு செய்து விவசாயம் செய்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

**3.** தாவா 'A' பட்டிகை சொத்து 1 முதல் 10 வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா 'B' பட்டிகை சொத்திற்கு முதல் பிரதிவாதியும், தாவா 'B' பட்டிகை இரண்டு சொத்திற்கு 2 - ம் பிரதிவாதியும் உரிமையாளர்கள் என்றும், இரண்டு 'B' பட்டிகை சொத்திற்கிடையே உள்ள பொதுப்பாதை 'C' பட்டிகை சொத்து என மனுவாதிகள் விவரித்துள்ளனர். 'C' பட்டிகை சொத்தினை பயன்படுத்தி தான் 'A' பட்டிகை சொத்திலுள்ள 10 மனுவாதிகளும், தங்களது விளை

பொருட்களை பிரதான சாலைக்கு எடுத்து வருவதாகவும், 'C' பட்டிகை சொத்தில் நிலவியல் ஓடை உள்ளது என்றும், அதன் பயன்பாட்டில் விவசாயமும் செய்து வருவதாகவும் மனுவாதிகள் தெரிவிக்கின்றனர்.

**4.** தாவா சொத்துக்களுக்கான தண்ணீர் ஆதாரம் பெரியகுளம் ஏரியிலிருந்து வருவதாக தெரிவிக்கின்றனர். தாவா 'A' பட்டிகை சொத்தை சென்றடைய தாவா 'C' பட்டிகை சொத்து ஒன்று தான் உள்ளது என்றும், தாவா 'B' பட்டிகை சொத்தின் ஒரு பகுதியாக தான் 'C' பட்டிகை சொத்து உள்ளதாக தெரிவிக்கின்றனர். பல வருடங்களாக 'C' பட்டிகை சொத்தினை மனுவாதிகள் அனுபவித்து வருவதாகவும், 2018 - ம் வருடம் 1 - ம் பிரதிவாதி 'B' பட்டிகை 1 - ம் இன சொத்தினை விலைக்கு வாங்கி 'C' பட்டிகை சொத்தில் பாதை அமைக்க முயற்சி செய்ததால் மனுவாதிகள் அதை தடுத்து நிறுத்தியதாகவும், இதற்கிடையே 'C' பட்டிகை சொத்தினை அடைப்பது மூலமாக மனுவாதிகள் விவசாயம் செய்யாமல் போகும் பட்சத்தில் அதை விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும், அதை விற்றுவிட்டால் வீட்டுமனைகளாக மாறிவிடும் என்று தெரிவிக்கின்றனர்.

**5.** தமிழ்நாடு பூமி தரமாற்றுதல் சட்டத்தின்படி, விவசாய பூமியினை வணிக பயன்பாட்டிற்கு மாற்ற இயலாது என்றும், 'C' பட்டிகை சொத்தினை முழுவதுமாக அடைத்து, 1 - ம் பிரதிவாதி தனது தீய எண்ணத்தை நிறைவேற்ற முயற்சி செய்வதால், அதை தடுத்து நிறுத்தி தாவா தீர்ப்பு வரும் வரை இடைக்கால உறுத்துக் கட்டளை பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுத்து மனுவினை தாக்கல் செய்துள்ளனர்.

**6. 1 - ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம் :**

மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பரிபூரணமாக மறுத்து, வழக்கு ஆரம்ப நிலையிலேயே நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுவில் தெரிவித்துள்ள பல்வேறு புல எண்களில் வாதிகளுக்கு சொத்து இருப்பதாக காண்பிப்பதற்கு அசல் வழக்கில் மனுவாதிகள் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு தாக்கல் செய்யாத ஒரு வழக்கில்

பரிகாரம் வழங்க இயலாது என தெரிவித்துள்ளனர். யார் என்ன சொத்து வைத்துள்ளனர் என்ற எந்த விபரமும் தெரிவிக்காமல், அவ்வாறு சொத்து வைத்திருப்பவர் எவ்வகையில் பாதிப்படைவர் என்ற விபரமும் காணாமல் உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க இயலாது என்றும், தமது சொத்தில் நிற்கக் கூடிய தென்னை மரங்களுக்கு 50 வயது இருக்கும் என்றும், 'C' பட்டிகை சொத்து என விவரித்திருப்பது கற்பனையான ஒரு சொத்து விவரித்தல் என தெரிவித்தினர்.

**7.** ரீ-சர்வே எண்.501 பூமியில் 15 சென்ட் பூமி அளவிற்கு நெற்பயிர் பயிரிடப்பட்டுள்ளது தெரியப்பட்டுள்ளது என்றும், நெற்பயிர் காணப்படும் எல்லா இடங்களிலும் மண் பாதை உள்ளது என்றும், ஒவ்வொரு வயலுக்கும் சென்றடைய வரப்பு உள்ளது என்றும், இதை மறைத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், பிரதான சாலைக்கு வாதிகளின் பூமி என சொல்லப்படும் விளை நிலங்களிலிருந்து செல்வதற்கு பாதை உள்ளது என தெரிவித்துள்ளனர். ஏற்கனவே இருந்த கம்பி வேலிகளை அகற்றிவிட்டு, 1 - ம் பிரதிவாதியானவர் கற்களால் சுவர் அமைக்க முயற்சி செய்த போது, 19.07.2021 - ம் தேதியன்று இரவோடு இரவாக டிராக்டர் மற்றும் புல்டவுசர் கொண்டு 1 - ம் பிரதிவாதி கட்டிய கல் சுவற்றினை இடித்து தள்ளிவிட்டனர் என்றும், தமக்குள்ள பூமி என்பது, வெறும் 11 சென்ட் பூமி என்றும், அதில் தென்னை மரங்கள் மட்டுமே நடவு செய்யப்பட்டுள்ளதாக 1 - ம் பிரதிவாதி தெரிவிக்கிறார். 2 - ம் பிரதிவாதி இந்த வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக அதிகாரம் பெற்ற முகவர் மூலமாக ஆஜர் ஆவதற்கு மனு ஒன்றினை மட்டும் தாக்கல் செய்துள்ளார்.

**8.** தாவா சொத்துக்களை பார்வையிட்டு அளந்து, புகைப்படம் எடுத்து, வரைபடத்துடன் கூடிய ஒரு அறிக்கையினை தாக்கல் செய்யும் பொருட்டு, எஸ். அஜில்குமார் என்ற வழக்கறிஞரை இந்த நீதிமன்றம் நியமித்து, இடைக்கால அறிக்கையினை தாக்கல் செய்ய பரிந்துரைத்தது. இதற்கிடையே தாங்கள் விளைவித்த விளை பொருட்களை 'C' பட்டிகை சொத்து வழியாக எடுத்து வருவதற்கு 1 - ம் பிரதிவாதி தடை ஏதும் ஏற்படுத்தக் கூடாது என

மனுவாதி கோரிக்கை விடுத்ததால், இந்த நீதிமன்றம் அந்த கோரிக்கையினை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது. இதனிடையே, 1 - ம் எதிர்மனுவாதி, தான் கட்டிய கற்சுவரினை ஆட்கள் பலம் கொண்டு இடித்துவிட்டுதான், வாதி இந்த வழக்கினையே தாக்கல் செய்துள்ளார் என தெரிவித்து, இந்த நீதிமன்றம் முன்பாக சில புகைப்படங்களை சமர்பித்தார் அதை பரிசீலிக்குமாறும் தெரிவித்தார்.

**9.** இருசாரார் தரப்பிலும் கேட்ட பிறகு, இந்த நீதிமன்றம், நீதியின்பால் கருதி இடைக்கால உத்தரவாக 'B' மற்றும் 'C' பட்டிகை சொத்து உள்ளது உள்ளப்படி, இந்த மனுவில் இறுதி உத்தரவு வரும் வரை இருக்க வேண்டுமென ஒரு இடைக்கால உத்தரவினை பிறப்பித்தது.

**10.** இறுதியாக, இந்த நீதிமன்றம், இந்த வழக்கினை விண்ணப்ப எண்.3/2021 மனுவினை இறுதி உத்தரவு பிறப்பிப்பதற்காக பரிசீலித்தபோது, வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலித்தபோது, தாவா 'B' பட்டிகை சொத்து சம்பந்தமாக சார்ஆட்சியரிடம் கொடுத்த புகார் அதற்கான அஞ்சல் ரசீது, அஞ்சல் ஒப்புகை அட்டை, தாக்கல் செய்துள்ளனர். 1 - ம் பிரதிவாதி பெயரிலுள்ள கிரய ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளனர். 2 - ம் பிரதிவாதி பெயரிலுள்ள கிரய ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்துக்களுக்கான புலப்பட சுவடியினை தாக்கல் செய்துள்ளனர். மாதிரி வரைபடத்தினை தாக்கல் செய்துள்ளனர்.

**11.** பிரதிவாதி தரப்பில் புகைப்படங்கள் தாக்கல் செய்துள்ளனர். செயற்கை கோள் படமும் தாக்கல் செய்துள்ளனர். 1 - ம் பிரதிவாதி புல எண்.501/17 பூமியில் பூமி வைத்திருப்பதற்கான பட்டாவினை தாக்கல் செய்துள்ளனர். கல்கட்டு சுவர் கட்டுவதற்கு அஸ்திவாரம் அமைத்ததற்கான புகைப்படம் தாக்கல் செய்துள்ளனர். பின்னர் அது இடித்த பின்பு உள்ள புகைப்படத்தினை தாக்கல் செய்துள்ளனர். கூடுதலான ஆவணங்கள் தாக்கல் செய்வதற்கான வழக்கிடை விண்ணப்ப மனு தாக்கல் செய்துள்ளனர். அது நிலுவையில் உள்ளது.

**12.** வழக்கறிஞர் ஆணையர் தனது இடைக்கால அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார். அதனுடன் கூடிய புகைப்படங்களையும் தாக்கல் செய்துள்ளார். அவரின் அறிக்கையின்படி, சர்வே எண்.501/2017 சொத்தின் கிழக்கு அத்தம் கல்லடுக்கு அகற்றப்பட்டிருப்பதை தெரிவிக்கின்றார். 501/17 சர்வே எண்ணில் தெற்கு பக்கம் தார் ரோடும், அதை ஒட்டி ஏழார் பிள்ளையார் கோவில் உள்ளது என தெரிவித்துள்ளார். 501/17 வழக்குப் பட்டிகை சொத்தின் தரை மட்டத்திற்கும், தெற்கு பக்கம் தார் ரோட்டிற்கும் உள்ள உயரத்தின் அளவு சுமார் 5 அடி சரிவாக உள்ளது என தெரிவிக்கிறார். மேலும், 501/2017 பூமியில் உள்ள தென்னை மரங்களுக்கு சுமார் 35 வயது இருக்கும். 40 அடி உயரம் இருக்கும் என தெரிவித்துள்ளார். மேலும், மேற்சொன்ன சாலை பூமியில் வடக்கு பக்கம் சொத்தின் இடையே தண்ணீர் கல் மேற்கிலிருந்து தொடங்கி கிழக்கு பக்கம் வயல்களுக்கு செல்கிறது என்றும், 502 சர்வே எண்ணில் தண்ணீர் ஓடை சேர்வதையும் தெரிவித்துள்ளார். 501/17 மற்றும் 501/18 - க்கும் இடையே 5 அடி பாதை வழித்தடம் போல் காணப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், 501/18 பூமி கிழக்கு பக்க வயல்கள் தார் ரோடு வந்து சேர்வதும், 501/8 மற்றும் 501/6 பூமிகளிலும் வரப்பு உள்ளதையும் தெரிவிக்கிறார். வாதி பூமிகளில் அறுவடை முடிந்துவிட்டதாக வழக்கறிஞர் ஆணையர் தெரிவிக்கிறார். வாதிகள் குறிப்பிட்டுள்ள புல பூமிகளில் 10 அடி பாதை இருப்பதாக தம்மால் உறுதியாக கூற இயலாது என தெரிவிக்கிறார். வரப்புகள் நீரோடையுடன் இணைகிறது என தெரிவித்துள்ளார்.

**13.** இனி வாதிகள் அவர்கள் குறிப்பிட்டுள்ள புல எண்களில் பூமி வைத்திருப்பதற்கான ஆவணங்கள் ஏதும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனரா? என தீர பரிசீலித்தபோது, யார் யார் என்ன புல எண்களில் எவ்வளவு பூமி வைத்துள்ளனர் என்பதனை காண்பிப்பதற்கு ஒரு ஆவணம் கூட இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அவர்கள் முன்வரவில்லை. 501/17 பூமிகளில் 10 அடி பாதை என அவர்கள் சொல்வது, 501/17 பூமியில் 5 அடியும், 501/18 பூமியில் 5 அடியும் என அவர்கள் வாதத்தில் முன் வைத்தாலும், இந்த வழக்கில், 2 - ம் பிரதிவாதி தன்னுடைய நிலைப்பாட்டினை தெரிவிக்க முன்வரவில்லை. மேலும், பிரதான தார்

சாலைக்கும் 501/17 - ல் பாதை என வாதிகளால் சொல்லப்படும் 'C' பட்டிகை சொத்திற்குமிடையே 5 அடி உயர வேறுபாடு உள்ளது என்பதனை வழக்கறிஞர் ஆணையர் தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ளார். ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஒரு சங்கதி யாதெனில், 1 - ம் பிரதிவாதிக்கு 501/17 பூமியில் 11 சென்ட் பூமி மட்டுமே உள்ளது. அதை நிரூபிக்கும் ஆவணத்தினை வாதிகளே தாக்கல் செய்துள்ளனர். கூடுதலாக, 1 - ம் பிரதிவாதி அதன் பெயரிலுள்ள பட்டாவினை தாக்கல் செய்துள்ளார். 11 சென்ட் பூமி முழுவதும் தென்னை மரங்கள் நடவு செய்துள்ளதையும் அந்த தென்னை மரங்களுக்கு 35 முதல் 40 வயது வரை இருக்கும் என வழக்கறிஞர் ஆணையர் தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்திருப்பதும், 501/17 பூமியில் தென்னை மரங்கள் மட்டுமே நடவு செய்யப்பட்டுள்ளது. முழுமையாக இந்த நீதிமன்றத்தின் முன்பாக ஆவண வாயிலாகவும், வழக்கறிஞர் ஆணையர் மூலமாக புகைப்படங்கள் மூலமாகவும், 1 - ம் எதிர்மனுதரர் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் வாயிலாகவும் நீதிமன்றத்திற்கு தெரிகிறது.

**14.** மேலும், 1 - ம் எதிர்மனுதரார் 'C' பட்டிகை சொத்து என சொல்லப்படும் பூமியில் தனது பாதுகாப்பிற்காக கல்கட்டு சுவர் ஒன்றினை எழுப்பியுள்ளார் என்பதும், அதை வலுக்கட்டாயமாக வாதிகள் இடித்துள்ளார்கள் என்பதனைக் குறித்து 1 - ம் பிரதிவாதி புகார் அளித்திருப்பதும், இந்த சங்கதிகளை மனுவாதிகள் தரப்பில் இந்த நீதிமன்றம் முன்பாக தெரிவிக்காமல், வழக்கு தாக்கல் செய்திருப்பதும், மனுவாதிகள் சுத்தமான கரங்களோடு இந்த மனுவினை தாக்கல் செய்யவில்லை என தெரிய வருகிறது. கூடுதலாக வாதிகள் தங்களுக்கு எவ்வளவு பூமி உள்ளது என்பதனைக் குறித்த முழு விபரத்தினையும் இந்த நீதிமன்றத்தில் தெரிவிக்காமல், அதன் புவியியல் அமைப்பு எவ்வாறு உள்ளது என்பதனை தெரிவிக்காமல், அந்த சொத்துக்கள் அவர்கள் பெயரில் உள்ளது என காண்பிப்பதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யாமல், அவர்கள் சுவாதீன உடைமையில் உள்ளதை நிரூபிக்கும் பொருட்டு, ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யாமல், 1 - ம் பிரதிவாதியின் சொத்திற்கு இடையே வழிப்பாதை செல்வதாக ஒரு வழக்கினை தாக்கல் செய்து, இடைக்கால உறுத்துக் கட்டளை

எதன் அடிப்படையில் அவர்கள் கோருகிறார்கள் என்பதனை ஆதாரங்களுடன் வழக்கிற்கு முதல்நிலை முகாந்திரம் உள்ளது என்றும், வழக்கில் பரிகாரம் வழங்கக் கூடிய சமநிலை தங்கள் பக்கம் உள்ளதாக நிரூபிப்பதற்கும் இடைக்கால உறுத்துக் கட்டளை வழங்காவிடில் தங்களுக்கு மிகப்பெரிய பேரிழப்பு ஏற்படுத்தக் கூடும் என்பதனை மனுவாதிகள் இந்த நீதிமன்றம் திருப்தியுரும் வகையில், நிரூபிக்க தவறியதால் மனுதாரர் கோரக்கூடிய இடைக்கால உறுத்துக் கட்டளை வழங்க இயலாது என தீர்மானித்து, இந்த நீதிமன்றம் இந்த மனுவினை தள்ளுபடி செய்கிறது.

**15 . <u>முடிவு</u> :**

இறுதியாக, மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2022 - ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 - ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இரணியல்.

1. **<u>மனுதாரர்கள் /வாதிகள் தரப்பு சாட்சி</u> :** இல்லை
2. **<u>மனுதாரர்கள் /வாதிகள் தரப்பு சான்றாவணம்</u> :** இல்லை
3. **<u>எதிர்மனுதாரர்கள் /1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u> :** இல்லை
4. **<u>எதிர்மனுதாரர்கள் /1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம்</u> :** இல்லை

ஒம்/-

மா.உ.நீ.,

இரணியல்.

மா.உ.நீ, இரணியல்.

**<u>வரைவு/ சீரான உத்தரவு</u>**

வ.வி.எண்.3/2021

இன்

அசல் வழக்கு எண்.45/2021

தேதி 22.02.2022